**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI**

**O.S. No.54 /2017**

**PW.1** is solemnly affirmed on **08.09.2022** in accordance with the provisions of the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | சண்முகம் | Father / Husband Name | |
| Village | | Taluk | |
| Caste | | Calling | |
| Religion | | Age | |

**குறிப்பு:**

சாட்சி தரப்பில் ஆங்கில மொழியில் முதல் விசாரணை சத்திய பிரமாணம் தாக்கல் செய்யப்பட்டள்ளது. சாட்சியிடம் நீதிமன்றம் வினவியபோது சாட்சியின் தாய்மொழி தமிழ் என்று கூறுகிறார். சாட்சி தமிழ்மொழியில் நன்கு பேசுகிறார். ஆனால் வீட்டில் மட்டும் தெலுங்கு மொழியில் பேசுவதாக கூறுகிறார். சாட்சியின் தாய்மொழி என்ன என்ற கேள்விக்கு தமிழ் மொழியிலும் பேசுவோம், தெலுங்கு மொழியிலும் பேசுவோம். இரண்டு மொழிகளுமே தனது தாய்மொழி என்று கூறுகிறார். எனவே சாட்சியின் சாட்சியம் தமிழ் மொழியில் பதிவு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் வாதி ஆவேன். என்னை வாதி தரப்பு சாட்சி 1 ஆக விசாரித்து கொள்கிறேன். எனது தரப்பு சாட்சியத்தை சத்திய பிரமாணமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. கிருஷ்ணகிரி வட்டம், சோக்காடி கிராமம் பட்டா எண். 1008 ராமப்ப கவுன்டர் மகன் வேடியப்பன் பெயரில் உள்ள கணினி பட்டாவின் இணையதள பதிவிறக்க நகல் Ex.A.1 ஆகும்.

2. 07.03.2014 தேதியில் எதிர்வாதிகளும் எனக்கும் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட அசல் கிரய ஒப்பந்தம் Ex.A.2 ஆகும்.

3. 14.12.2015 தேதியில் நான் என் வழக்கறிஞர் மூலம் எதிர்வாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் Ex.A.3 ஆகும்.

4. 15.12.2015 தேதியில் 1 முதல் 5 எதிர்வாதிகளின் முகவரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பை உள்ளடக்கிய திருப்பப்பட்ட அஞ்சல் உறைகள் முறையே Ex.A.4 to Ex.A.8 ஆகும்.

வழக்கில் கோரியுள்ளபடி தீர்வு செய்ய வேண்டுகிறேன்.

(எதிர்வாதிகள் வழக்கறிஞர் முன்னிலை. அவரது வேண்டலின் பேரில் குறுக்கு விசாரணைக்காக இவ்வழக்கு 22.09.2022ஆம் தேதி ஒத்தி வைக்கப்படுகிறது. )

PRINCIPAL DISTRICT JUDGE

R SAKTHIVEL

Digitally signed by R SAKTHIVEL
Location: KRISHNAGIRI